# மொத்தத் தேசிய உற்பத்தி, வருவாய், செலவு

**பொதுவான போக்குகள்**

உண்மை நியதிகளில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொஉஉ) 1986 இன் 4.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1987 இல் 1.5 சத வீதத்தினுல் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைப் பொருளா தாரத்தில் மிக முக்கிய செல்வாக்கினை வகித்த வேளாண்மைத்துறை பெரும் பாலும் பாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக 1987 இல் பின்தங்கிய செயலாற்றத்தினைக் கொண்டிருந்தது. நீண்ட வரட்சியினுல் மோசமாகப் பாதிக் கப்பட்டவை நெல், தெங்கு உற்பத்திகளாகும். தயாரிப்புத்துறையின் வளர்ச்சி வேகம் முந்திய ஆண்டினதைவிடக் குறைவான வீதமாக இருந்தபோதிலும் 1987 இல் அதன் வளர்ச்சியினைப் பேணியது. கட்டடத் துறையும், அகழ்தல், பார்க்குழித் துறையும் 1987 இல் உயர்ந்தளவு வளர்ச்சி வீதத்தினைப் பதிவு செயதன. பணிகள் துறையானது சார்புரீதியில் குறைந்த வீதத்தில் விரிவடைந் தது.

நடைமுறைக் காரணிச் செலவு விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி 1987 இல் ரூ. 17,340 கோடியாக விளங்கி 1986 ஆம் ஆண்டினைவிட 8.5 சத வீதம் அதிகரித்திருந்தது. பொருளாதாரத்தின் பொதுவான விலை மாற்றத்தின் குறிகாட்டியான உள்ளடக்க மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கி முன்னைய ஆண்டின் 5.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1987 இல் 6.8 சதவீதத்தினுல் உயர்வடைந்தது.

இலங்கையின் நடு ஆண்டுக் குடித்தொகை 1987 இல் 163.61 இலட்சமாகத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டது. இது 1986 ஆம் ஆண்டினைவிட 1.5 சதவீத வளர்ச்சியினைக் காட்டியது. ஆகையால் நடைமுறை விலைகளில் தலைக்குரிய மொத் தத் தேசிய உற்பத்தி ரூ. 10,598 ஆக (360 ஐ.அ. டொலர்கள்) மதிப்பிடப் பட்டது. உண்மை நியதிகளில் தலைக்குரிய வருமானம் முந்திய ஆண்டின் 2.7 சத வீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1 சதவீதத்தால் சிறிதளவு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வர்த்தக மாற்றுவீதத் தாக்கங்களிற்குச் சீராக்கம் செய்யப் பட்ட பின்னர் உண்மைத் தேசிய வருமானம் முன்னைய ஆண்டின் 3.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் நடைமுறை ஆண்டில் 2.1 சதவீதத்தினுல் அதிகரித் தது.

**துறைவாரியான செயலாற்றம்**

மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவகைப்படியான உள்ளடக்கமும் நிலையான விலைகளில் கூட்டப்பட்ட பெறுமதியிலான மாற்றங்களும் அட்டவணை 1.6 இல் தரப்பட்டுள்ளன. வேளாண்மை, காட்டுத்தொழில், மீன்பிடித்துறைகள் 1987 இல் 5.8 சதவீதமான வீழ்ச்சியைக் காட்டின. இது இரண்டு முக்கிய பயிர் வகைகளாகிய நெல், தெங்கு ஆகியவற்றின் குறைந்த உற்பத்தி மட்டங் களின் காரணமாக ஏற்பட்டதாகும். காட்டுத்தொழில், மீன்பிடித் தொழில் ஆகியவற்றின் கூட்டப்பட்ட பெறுமதி முறையே 13 சதவீதத்தாலும், 4 சத வீதத்தாலும் அதிகரித்தபோதும் வேளாண்மைத்துறையின் கூட்டப்பட்ட பெறு மதி 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பெருந்தோட்ட வேளாண்மையில்

அட்டவணை 1.6

## நிலையான விலைகளில் ( 1982 ) மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் 1985 – 1987

| துறை | கூட்டப்பட்ட பெறுமதி ( ரூ. ப. இ. ) 1985 | 1986 (அ) | 1987(அ) | மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீதப் பங்கு 1985 | 1986 | 1987 | முன்னைய ஆண்டுக்கு மேலான அதிகரிப்பு (ப. இ. ரூ.) 1986 | 1987 | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு 1986 | 1987 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் ... | 28,366 | 29,106 | 27,409 | 26.6 | 26.1 | 24.2 | 740 | - 1,697 | 15.3 | — 97.4 |
| 1.1 வேளாண்மை ... | 24,504 | 25,037 | 23,003 | 23.0 | 22.4 | 20.3 | 533 | - 2,034 | 11.0 | - 116.8 |
| 1.1.1 தேயிலை ... | 2,759 | 2,723 | 2,750 | 2.6 | 2.4 | 2.4 | — 36 | 27 | — 0.7 | 1.5 |
| 1.1.2 இறப்பர் ... | 851 | 856 | 765 | 0.8 | 0.8 | 0.7 | 5 | — 91 | 0.1 | — 5.2 |
| 1.1.3 தெங்கு ... | 3,828 | 3,935 | 2,967 | 3.6 | 3.5 | 2.6 | 107 | - 968 | 2.2 | — 55.6 |
| 1.1.4 நெல் ... | 6,783 | 6,613 | 5,423 | 6.4 | 5.9 | 4.8 | — 170 | - 1,198 | — 3.5 | — 68.3 |
| 1.1.5 ஏனையவை ... | 10,283 | 10,910 | 11,098 | 9.6 | 9.8 | 9.8 | 627 | 188 | 13.0 | 10.8 |
| 1.2 காட்டுத் தொழில் ... | 1,923 | 1,958 | 2,215 | 1.8 | 1.8 | 2.0 | 35 | 257 | 0.7 | 14.8 |
| 1.3 கடற்றொழில் ... | 1,939 | 2,111 | 2,191 | 1.8 | 1.9 | 1.9 | 172 | 50 | 3.6 | 4.6 |
| 2. சுரங்க அகழ்தலும் கல் உடைத்தலும் ... | 2,486 | 2,615 | 3,112 | 2.3 | 2.3 | 2.8 | 129 | 497 | 2.7 | 28.5 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 16,193 | 17,558 | 18,748 | 15.1 | 15.7 | 16.5 | 1,365 | 1 190 | 28.3 | 68.3 |
| 3.1 மரப்பயிர் பதனிடல் ... | 3,222 | 3,225 | 3,340 | 3.0 | 2.9 | 2.9 | 3 | 115 | 0.1 | 6.6 |
| 3.2 தொழிலகக் கைத்தொழில் ... | 10,811 | 12,108 | 13,113 | 10.1 | 10.8 | 11.6 | 1,297 | 1,105 | 26.9 | 57.7 |
| 3.3 சிறு கைத்தொழிலும் ஏனையவையும் ... | 2,160 | 2,225 | 2,295 | 2.0 | 2.0 | 2.0 | 65 | 70 | 1.3 | 4.0 |
| 4. கட்டடவாக்கம் ... | 8,070 | 8,191 | 8,338 | 7.6 | 7.3 | 7.4 | 121 | 147 | 2.5 | 8.4 |
| 5. மின்வலு, வளி, நீர், நலத்துறைப் பணிகள் ... | 1,313 | 1,406 | 1,448 | 1.2 | 1.3 | 1.3 | 93 | 42 | 1.9 | 2.4 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் ... | 12,959 | 13,377 | 13,538 | 12.1 | 12.0 | 11.9 | 418 | 161 | 8.7 | 9.2 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் ... | 22,925 | 23,821 | 24,496 | 21.5 | 21.4 | 21.6 | 896 | 675 | 18.6 | 38.8 |
| 8 வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து ... | 4,975 | 5,174 | 5,490 | 4.7 | 4.6 | 4.8 | 199 | 316 | 4.1 | 18.2 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை ... | 3,432 | 3,497 | 3,550 | 3.2 | 3.1 | 3.1 | 65 | 53 | 1.3 | 3.1 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் ... | 4,432 | 5,274 | 5,435 | 4.2 | 4.7 | 4.8 | 842 | 161 | 17.5 | 9.2 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) ... | 4,419 | 4,242 | 4,358 | 4.2 | 3.8 | 3.9 | — 177 | 116 | — 3.7 | 6.7 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 109,570 | 114,261 | 115,922 | 102.7 | 102.4 | 102.3 | 4,691 | 1,661 | 97.2 | 95.4 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் ... | — 2,829 | — 2,696 | — 2,615 | — 2.7 | — 2.4 | — 2.3 | 133 | 81 | 2.8 | 4.6 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 106,741 | 111,565 | 113,307 | 100.0 | 100.0 | 100.0 | 4,824 | 1,742 | 100.0 | 100.0 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

தேயிலையின் உற்பத்தி 1 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் இறப்பர் உற்பத்தி 11 சதவீதத்தாலும், தெங்குப் பொருட்களின் உற்பத்தி 25 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. உணவுப் பயிர் துணைத்துறையில் நெல் உற்பத்தி 18 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

1987 இல் சுரங்கம் அகழ்தலும் கல் உடைத்தலும் துறையின் வெளியீடு 19 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு ஏற்றுமதிகளின் அதிகரிப்பில் காணப்படுவது போன்று இரத்தினக்கற் கைத்தொழிலில் காணப்பட்ட விரிவாக்கமே காரண மாகும். 1987 இல் இரத்தினக்கல் ஏற்றுமதிகளின் சி.எ.உ. பெறுமதி முன்னைய ஆண்டினை விட 65 சதவீதத்தால் அதிகரித்தது.

1987 இல் தயாரிப்புத்துறை 7 சதவீதமான பொதுவான வளர்ச்சியினைப் பதிவு செய்தது. இதற்கு அரசுக்குச் சொந்தமான கைத்தொழில்களின் வெளியீட்டில் 3 சதவீத வீழ்ச்சி காணப்பட்டபோதிலும் தொழிற்சாலைக் கைத்தொழில்களில் காணப்பட்ட 8.3 சதவீத வளர்ச்சியே பெருமளவுக்குக் காரணமாகும். முன்னைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து 1987 இல் புடவை, அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் தொகுதி 37 சதவீதமான உயர் அதிகரிப்பொன்றினைப் பதிவு செய்தது. ஏற்றுமதிசார் வேளாண்மைப் பதனிடல் 4 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வளர்ச்சி முக்கியமாக, 1987 இல் உறைகளில் அடைக்கப்பட்ட தேயிலையின் ஏற்றுமதியில் 15 சதவீதமான அதிகரிப்பு ஏற்பட்டதன் விளைவாக ஏற்பட்டதுடன் இதன்மூலம் இவ்வேற்றுமதிகள் இலங்கையின் தேயிலை ஏற்றுமதியில் 40 சதவீதத்திற்கு வகைகூறுமளவுக்கு விளங்கின. தொழிற்சாலைக் கைத்தொழில்கள் துணைத்துறையில், தனியார்துறைக் கைத்தொழில்களின் கூட்டப்பட்ட பெறுமதி 1986 இன் 15 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1987 இல் 13 சதவீதத்தால் அதிகரித்தது.

கட்டுமானத்துறை 1986 இன் 1.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1987 இல் 1.8 சதவீதத்தால் அதிகரித்தது. பணிகள் துறை 1986 இன் 4.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.7 சதவீதத்தால் உயர்வடைந்தது. பணிகள் துறையில் வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து, ஏனைய

அட்டவணை 1.7

**மூலதனச் செலவின் இறக்குமதி உள்ளடக்கம் 1985–1987**

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| | விடயம் | 1985 | 1986* | 1987* |
|---|---|---|---|---|
| 1. | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் ... | 38,457 | 42,326 | 45,752 |
| 2. | முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (கொ. கா க. பெறுமதிகளில்) ... | 9,488 | 9,649 | 10,623 |
| 3. | கப்பல்களும் வான்கலங்களும் தவிர்ந்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (கொ. கா. க. பெறுமதிகளில்) ... | 7,877 | 9.649 | 10,623 |
| 4. | இறக்குமதி உள்ளடக்கம் (1 இன் சதவீதமாக 2) ... | 24.7 | 22.8 | 23.2 |

* தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 1.8

## மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும் 1978—1987

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ப. இ. ரூ.) | | | | 1978 விலைகளில் | | | | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1978 | 1985 | 1986(அ) | 1987(அ) | 1978 | | 1985 | | 1986(அ) | | 1987(அ) | | 1985 இற்கு மேலாக 1986 | 1986 இற்கு மேலாக 1987 |
| | | | | | தொகை ப.இ. ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | தொகை ட.இ.ரூ. | % | | |
| 1. மொத்த மூலவளங்கள் ... | 59,537 | 224,021 | 242,881 | 266,946 | 59,537 | 100 | 85,809 | 100 | 90,712 | 100 | 91,192 | 100 | 5.7 | 0.5 |
| 1.1 மொ. உ. உ. சந்தை விலைகளில் ... | 42,665 | 162,375 | 179,474 | 196,723 | 42,665 | 72 | 61,852 | 72 | 64,512 | 71 | 65,480 | 72 | 4.3 | 1.5 |
| 1.2. பொருட்களினதும், காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் ... | 16,872 | 61,646 | 63,407 | 70,223 | 16,872 | 28 | 23,957 | 28 | 26,200 | 29 | 25,712 | 28 | 9.4 | — 1.9 |
| 2. பயன்பாடு ... | 59,537 | 224,021 | 242,881 | 266,946 | 59,537 | 100 | 85,809 | 100 | 90,712 | 100 | 91,192 | 100 | 5.7 | 0.5 |
| 2.1. நுகர்வு ... | 36,148 | 143,102 | 157,850 | 171,487 | 36,148 | 61 | 53,091 | 62 | 54,206 | 59 | 54,659 | 60 | 2.1 | 0.8 |
| 2.2. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் .. | 8,521 | 38,457 | 42,326 | 45,752 | 8,521 | 14 | 13,688 | 16 | 15,040 | 17 | 14,976 | 16 | 9.9 | — 0.4 |
| 2.2.1. அரசு ... | (3,077) | (7,767) | (9,634) | (11,216) | (3,077) | (5) | (3,963) | (5) | (4,479) | (5) | (4,299) | (4) | (13.0) | (—4.0) |
| 2.2.2. அரசகூட்டுத்தாபனங்கள் | (2,056) | | | | (2,056) | (3) | | | | | | | | |
| 2.2.3. தனியார்துறை ... | (3,388) | (30,690) | (32,692) | (34,536) | (3,388) | (6) | (9,725) | (11) | (10,561) | (12) | (10,677) | (12) | (8.6) | (1.1) |
| 2.3. இருப்புக்களில் மாற்றம் ... | 33 | 225 | 137 | 148 | 33 | — | 63 | — | 38 | — | 37 | — | — | — |
| 2.4. பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் ... | 14,835 | 42,237 | 42,568 | 49,559 | 14,835 | 25 | 18,967 | 22 | 21,428 | 24 | 21,520 | 24 | 13.0 | 0.4 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பணிகள் என்பன உயர்வான வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன. வங்கித் தொழில்துறையின் இலாபத்தில் அதிகரிப்பு ஏற்பட்டதன் விளைவாக நிதிப் பணிகளில் 1986 இன் 4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1987 இல் 6 சதவீத வளர்ச்சி பதிவு செய்யப்பட்டது. இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிப்படைந்தமையும், குறைவான உற்பத்தி மட்டங்கள் காரணமாக வேளாண்மைப் பண்டங்களின் குறைவான இடமாற்றமும் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல்துறையின் மிதமான வளர்ச்சிக்கான காரணிகளாக விளங்கின. மொத்த விற்பனையிலும் சில்லறை வர்த்தகத்திலும் கூட்டப்பட்ட பெறுமதி 1986 இன் 3.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1987 இல் 2.8 சதவீதத்தால் உயர்வடைந்தது. ஏற்றுமதி வர்த்தகம் சிறிதளவால் அதிகரித்தவேளையில் இறக்குமதி வர்த்தகம் 1.7 சதவீதத்தால் விரிவடைந்தது. 1987 இல் நீர்த்தேக்கங்களில் காணப்பட்ட குறைவான நீர் வழங்கல் நீர் மின்வலு மூலமான மின் உருவாக்கத்தில் 18 சதவீத வீழ்ச்சியை விளைவித்ததுடன் இது 3 சதவீதமான மிதமான அதிகரிப்புக்கு மொத்த மின் உருவாக்கத்தினைக் குறைவடையச் செய்து மின்வலு, வாயு, நீர், நலத்துறைப் பணிகள் துறையில் குறைந்த வளர்ச்சியை ஏற்படுத்தப் பெருமளவுக்கு பொறுப்பாகவிருந்தது.

பொது நிருவாகம் பாதுகாப்பு என்பவற்றின் கூட்டப்பட்ட பெறுமதி 1986 இன் 19 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1987 இல் 3 சதவீதத்தால் அதிகரித்தது.

### செலவுப்போக்கு

1987 இல் நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு ரூ. 21,740 கோடியாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 8.5 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. மொத்த நுகர்வுச் செலவு 1987 இல் 8.6 சதவீதத்தினால் அதிகரித்து ரூ. 17,150 கோடியை அடைந்தது. தனியார் நுகர்வுச் செலவு 9 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் அரசதுறை நுகர்வுச் செலவு 6 சதவீதத்தினால் விரிவடைந்தது

**அட்டவணை 1.9**

**தேசிய சேமிப்புகள் 1985—1987**
(நடைமுறைச் சந்தை விலைகளில்)

(ப. இ. ரூபாய்களில்)

| வகை | 1985 | 1986* | 1987* |
|---|---|---|---|
| 1. மொ. உ. உ. சந்தை விலைகளில் | 162,375 | 179,474 | 196,723 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புகள் ... | 19,273 | 21,624 | 25,235 |
| 3. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் ... | —3,400 | —3,861 | —4,336 |
| 4. தேறிய தனியார் மாற்றல்கள் ... | 7,212 | 8,251 | 9,161 |
| 5. தேசிய சேமிப்புகள் ... | 23,085 | 26,014 | 30,060 |
| 6. உள்நாட்டு சேமிப்பு விகிதாசாரம் (1இன் சதவீதமாக 2) ... | 11.9 | 12.0 | 12.8 |
| 7. தேசிய சேமிப்பு விகிதாசாரம் (1இன் சதவீதமாக 5) ... | 14.3 | 14.5 | 15.3 |

* தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இருப்புக்களின் மாற்றங்களை உள்ளடக்கிய நடைமுறை விலைகளிலான மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் 1987 இல் 8 சதவீதத்தினால் அதிகரித்தது. முன்னைய ஆண்டில் இது 9.8 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்திருந்தது. 1987 இல் தனியார் துறையினதும் அரச கூட்டுத்தாபனங்களினதும் இணைந்த மூலதன ஆக்கம் 5.6 சதவீதத்தினால் உயர்வடைந்தது. 1986 இன் ஒப்பிடத்தக்க அதிகரிப்பு 6.4 சதவீதமாக இருந்தது. 1987 இல் மத்திய மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1986 ஆம் ஆண்டின் 23 சதவீத விரிவுடன் ஒப்பிடுகையில் 17 சதவீதத்தினால் விரிவடைந்தது.

1987 இல் நடைமுறை விலைகளில் மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் 8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1987 இல் மூலதனப் பொருட்களின் இறக்குமதியின் கொ.கா.க. பெறுமதி (கட்டிட மூலப்பொருட்கள் தவிர) 1986 இன் 2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 10 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இதனால் மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கத்தின் இறக்குமதி உள்ளடக்கத்தில் சிறிதளவு அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. கட்டிடங்கள் உட்படக் கட்டிடவாக்கம் மூலதனவாக்கத்தில் மிகப் பெரும் கூறாக இருந்தது.

1987 இல் நடைமுறை விலைகளில் பொறிகள், பொறித் தொகுதிகள், ஏனைய மூலப்பொருட்களில் மூலதனவாக்கம் 5 சதவீதத்தினால் அதிகரிக்க, போக்குவரத்துக் கருவிகளில் மூலதனவாக்கம் 2 சதவீதத்தினால் உயர்வடைந்தது. மீள் பயிரிடல் உட்படக் காணி அபிவிருத்தி, வரட்சி நிலைமைகளின் பெருமளவு காரணமாக 14.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**மூலவளங்களின் கிடைத்தலும் பயன்பாடும்**

1987 இல் இலங்கைப் பொருளாதாரத்திற்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த மொத்த மூலவளங்கள் ரூ. 26,690 கோடியாக இருந்தது. மொத்த மூலவளங்களுக்கு உள்நாட்டு மூலங்கள் ரூ. 19,670 கோடியினை (73.7 சதவீதம்) வழங்கிய வேளையில் இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 7,020 கோடியாக (26.3 சதவீதம்) விளங்கியது. மொத்த மூலவளங்களில் 64.2 சதவீதம் நுகர்விலும், 17.2 சதவீதம் மூலதனவாக்கத்திலும் செலவிடப்பட்ட வேளையில் 18.6 சதவீதம் பொருட்கள் காரணியல்லாப் பணிகளாக ஏற்றுமதி செய்யப்பட்டது.

1978 இன் நிலையான விலைகளில் மதிப்பிடப்பட்ட கிடைக்கத்தக்க மொத்த மூலவளங்கள் 1987 இல் 0.5 சதவீதத்தினால் அதிகரித்தன. 1987 இல் பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் இறக்குமதிகள் முன்னைய ஆண்டினைவிட 1.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. நிலையான விலைகளில் மதிப்பிடப்பட்ட நுகர்வுச் செலவு 0.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மூலதனவாக்கம் 0.4 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றது.

உள்நாட்டுச் சேமிப்புக்கள் 1986 இன் ரூ. 2,160 கோடியிலிருந்து 1987 இல் ரூ. 2,520 கோடிக்கு அதிகரித்தன. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உள்நாட்டுச் சேமிப்புக்களின் விகிதம் சந்தை விலைகளில் 1986 இன் 12 சதவீதத்திலிருந்து 1987 இல் 12.8 சதவீதத்திற்குச் சிறிதளவால் முன்னேறியது. தேறிய காரணி வருவாய், வெளிநாடுகளிலிருந்தான தனியார் மாற்றல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய மொத்தத் தேசிய சேமிப்புக்கள் 1987 இல் ரூ. 3,000 கோடியென மதிப்பிடப்பட்டது. 1987 இல் தேசிய சேமிப்பு விகிதம் முன்னைய ஆண்டின் விகிதமான 14.5 சதவீதத்திலிருந்து 15.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.